Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.325/2022 PW-1**

Name : பாலு
Father / Husband name : கோவிந்தசாமி
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 10.10.2024

**Accused Present.**

**குறுக்கு விசாரணை**

எனது பூர்வீகம் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் என்றால் சரிதான். நான் திண்டிவனத்தில் எவ்வளவு நாட்களாக இருக்கிறேன் என்றால் 12 வருடங்களாக இருக்கிறேன். எனது தகப்பானார் ஆசிரியராக இருந்து ஏஇஓ வாக பணிஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அப்பா பணியிலிருக்கும்போதும், அதன் பிறகும் வட்டிக்கு தெரிந்தவர்களுக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. எனது தந்தை வட்டிக்கு பணம் கொடுப்பவர் நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் பூர்வீகம் என்ன ஊர் என்றால் கள்ளக்குறிச்சி. எதிரியின் ஊர் திருநெல்வேலி மாவட்டம், திருமணம் செய்துகொண்டு வந்தது தான் கள்ளக்குறிச்சி என்றால் அவர் தற்போது இருப்பது கள்ளக்குறிச்சி மாவட்டம். நான் தாக்கல் செய்த புகார்மனுவிலும், வாக்குமூலத்திலும் எதிரியும் எனது தகப்பனாரும் குடும்பநண்பர்கள் என்பது கூறியிருப்பது தவறு, எதிரியும் எனது தந்தையும் ஒரே துறையில் வேலை செய்ததை தவிர வேறு எந்த உறவும் இல்லை என்றால் எதிரியின் கணவரும் எங்கள் வீட்டில் குடியிருக்கும் நட்ராஜ் என்பவரும் நண்பர்கள் என்பதால் அடிக்கடி அவர்கள் எங்கள் வீட்டிற்கு வரும்போது பழக்கம். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பேர். எதிரியின் கணவரின் பெயர் என்ன என்றால் ராஜ்குமார். எனது புகார் மனுவில் 2018 ம் வருடம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் ரூ.1,50,000/- ஐ பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன், ஆனால் எந்த தேதி மற்றும் இடம் என்று குறிப்பிட்டு வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது எதிரி எங்கு குடியிருக்கிறார், அங்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். எதிரி தற்போது

கள்ளக்குறிச்சி நகரில் க.மாமனந்தல் என்ற இடத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம் செல்லும் வழியில் ரோடுமாமந்தூர் என்ற இடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த விலாசித்திற்கு தான் நான் 19.11.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் நெ.21 டி, ரோடு மாமந்துர் என குறிப்பிடப்பட்டு சரியான விலாசத்தில் இல்லை என்று குறிப்பிட்டு திருப்பபட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழையின் காரணமாக திருப்பப்பட்டது. எதிரியின் மற்றொரு விலாசம் பள்ளிக்கு அனுப்பிய அறிவிப்பை அவர் வாங்க மறுத்துவிட்டார் என்று கூறியிருப்பது உண்மைஅல்ல என்றால் சரியல்ல. காசோலையில் தேதி, பெயர் மற்றும் தொகை எழுத்தால் எழுதப்பட்டவைகள் அனைத்தும் யார் எழுதினார்கள் என்றால் அவர் வரும்போதே எழுதிஎடுத்துவந்துவிட்டார். எதிரி அவ்வாறு எழுதவில்லை, நான் தான் வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.